பிரிவு கட்டடம் கிடையாது. அதைப்போல மகப்பேறு பிரிவிற்கென்று தனிப் பிரிவு கட்டடம் கிடையாது. ஆகவே அதையும் தாங்கள் கவனத்தில் கொண்டு வரும் நிதியாண்டில் அதற்கு நிதி ஒதுக்கி அந்தக் கட்டடங்களைக் கட்டித்தர ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட டாக்டர்கள் பணியிடம் மொத்தம் 11. அந்த 11 இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 2 இடங்களுக்கு, அதாவது மயக்க மருந்து நிபுணர் பணியிடத்திற்கும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பணியிடத்திற்கும் Assistant Surgeon-Surgery தகுதியோடு 2 பணியிடங்களையும் நிரப்பிவிட்டார்கள். அங்கே மயக்க மருந்து நிபுணர் ஒருவரும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே, அந்த 2 பணியிடங்களும் விரைவிலே நிரப்பப்படும். தற்போது அங்கே பணிகள் எதுவும் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையிலே மயக்க மருந்து நிபுணர் மாற்றுப் பணியிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறார்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 220, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

220—

TRUTH ALONE TRIUMPHS

குடிநீர்

***284—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரில் குடிநீர்ப் பிரச்சினை நீங்கிட ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம் விரைவில் நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

2002 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் நகரில் குடிநீர்ப் பிரச்சினையை நீக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகராட்சி 100 ஆண்டுகளுக்கு மேலாக நகராட்சியாகவே இருக்கக்கூடிய ஒரு பெரிய நகரமாகும். அது வளர்ந்து வரக்கூடிய நகரமாகவும் இருக்கக்கூடிய காரணத்தினால், திடீரென ஏற்படக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு, குடிநீர்ப் பிரச்சினைகள் இவற்றைக் களைய வேண்டி கடந்த ஆட்சியிலே முதல்வராக கலைஞர் அவர்கள் இருந்தபோது, 17.00 கோடி ரூபாயில் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி. மணி அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டது. புதிய குழாய்கள் போடுவதும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்றுக்கொண்டு வந்தன. இப்போது மீண்டும் அமைச்சர் அவர்கள், அது துரிதப்படுத்தப்படும், விரைவுப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நான் அறிந்துகொள்ள விரும்புவது, அதற்கான காலம் நிர்ணயித்திருக்கிறார்களா? எவ்வளவு காலத்திற்குள்ளாக இந்தப் பணியை முடிப்பது என்று முடிவு செய்திருக்கிறார்களா? அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்? விரைவாக அந்தப் பணியை நடத்துவதற்கு வேறு எந்தவிதமான துரிதப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகருக்கு 1,691.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு, அரசு ஒப்புதல் வழங்கி, ஒப்பந்தப்புள்ளி கோரி, 18-4-2001 அன்று ஒரு குறிப்பிட்ட கம்பெனி பணியைத் தொடங்கியிருக்கிறது. அந்தக் கம்பெனிக்கு இந்தக் காலத்திற்குள் இத்தனை சதவிகிதப் பணி செய்து முடிக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்திருந்தும், அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தக் கம்பெனியானது முடிக்காமல் பணியில் மந்தமும், தாமதமும் செய்த காரணத்தினால், அந்தப் பணியை மேற்கொண்ட கம்பெனியினுடைய ஒப்பந்தத்தை இரத்து செய்து, வேறு புதிய ஒப்பந்தம் கோரப்பட்டு, 27-5-2002 இறுதி நாளாகக் குறிப்பிட்டு,

இந்தப் பணி விரைவாக நடத்தப்பட வேண்டும் என்று, 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டுவரை காலம் நிர்ணயித்திருப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குள்ளாக இடைப்பட்ட காலங்களில் — கடலூர் மக்கள் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு, அவர்களுக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கு நகராட்சி மூலமாக எடுத்துக்கொண்டிருக்கின்ற துரித கால நடவடிக்கைகள் என்ன? போர்க்கால பணிகள் போல இந்த அரசு ஏதேனும் கூடுதலாக நிதியொதுக்கி, கடலூர் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை அந்தக் காலத்திற்குள்ளாக வருவதை நீக்குவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமும் அறிக்கை பெறப்பட்டு, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து அனுப்பியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. திருமாவளவன்.

திரு. இரா. திருமாவளவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதிலே ஒன்று, ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டத்தின்படி மக்களின் பங்காக 10 சதவிகிதம் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிதியை சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து செலுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, கடலூர் குடிநீர்த் திட்டம் குறித்து.

வினா எண் 221, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.